**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 9–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண்.13/2025 இன் அ.வ.எண். 194/2004</u>**

**<u>CNR No. TNSA13–000025– 2004</u>**

செங்கோடன் . . . மனுதாரர்/3 ம் வாதி

/எதிராக/

1. செல்லம்மாள் (இறந்தவர்)
2. இளையப்பன் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. கைலப்ப கவுண்டர் (இறந்தவர்)
4. நல்லம்மாள் (இறந்தவர்)
5. குப்புசாமி (இறந்தவர்)
6. நடேசன்
7. சரோஜா
8. மணி (எ) பெருமாயி
9. தங்கம் (எ) பார்வதி
10. K.சரோஜா (இறந்தவர்)
11. P.கலைச்செல்வி
12. K.பழனிவேல்
13. வேல்முருகன்
14. நீலாவதி . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 02.09.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்/3 ம் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.L.தயாளன் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.R.ராம்சுந்தர் அவர்கள் ஆஜராகியும், 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.K.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 8, 9, 13, 14

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/3ம் வாதி தரப்பில் இம்மனுவை தனது தரப்பு சாட்சியத்தை Reopen செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/3ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**

மனுதாரர் மேற்படி வழக்கில் 3ம் வாதி என்றும், 1ம் வாதி செல்லம்மாள் தனது தாயார் மற்றும் 2ம் வாதி தனது மூத்த சகோதரன் என்றும், வாதிகள் பாகம் மற்றும் தனித்த சுவாதீனம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்குச் சொத்தானது மனுதாரரின் தாத்தா இளையப்ப கவுண்டர் மற்றும் அவரது மனைவிக்கு ஒதுக்கப்பட்டதாகவும், 16.02.1950 தேதியிட்ட பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரரின் தாத்தாவும், பாட்டியும் தங்கள் வாழ்நாள் வரை குத்தகைக்கு அல்லது நேரடி சாகுபடி மூலம் வழக்குச் சொத்தை அனுபவிக்கலாம் எனவும், அவர்களின் மரணத்திற்குப் பிறகு, வழக்குச் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும், வழக்கின் வாதங்களின்படி, மனுதாரரின் தாத்தாவின் முழு வழக்குச் சொத்திலும் மனுதாரர் 1/4 பங்கைப் பெற்றுள்ளதாகவும், ஆனால் தற்பொழுது மனுதாரரின் மூத்த சகோதரரான 2ம் வாதி வழக்குரைக்கு எதிராக ஒரு பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ததாகவும், மேலும் முழு பிரிவினை சொத்துக்களும் மனுதாரரின் மூத்த சகோதரருக்கு மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டும் என வாதிடப்பட்டதாகவும், வழக்கானது மனுதாரர், 1ம் வாதியான அவரது தாயார் மற்றும் அவரது மூத்த சகோதரர் ஆகியோர் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, 2ம் வாதியை வழக்கில் பிரதிவாதியாக மாற்றக் கோரி மனு தாக்கல் செய்து அம்மனுவானது தள்ளுபடி

செய்யப்பட்டு வழக்கு விசாரணையின் மூலம் தீர்வு காணுமாறு வாதிக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

மனுதாரரின் மூத்த சகோதரர் தனது சொந்த சொத்து என கூறி ஒரு பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் படிப்பறிவில்லாததால் அவரது இயலாமையைப் பயன்படுத்தி 2ம் வாதி வழக்குரைக்கு எதிராக பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே தனது சாட்சியங்களை சேர்ப்பதற்காக வாதியின் தரப்பை மீண்டும் திறக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், இல்லையெனில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத அளவுக்கு இழப்பு ஏற்படும் என்றும், எனவே மனுதாரர் / 3வது வாதி தரப்பை மீண்டும் திறக்க(Reopen) செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>2ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். வழக்கு தாக்கல் செய்யும் போது, 1ம் வாதியான இறந்த செல்லம்மாள், மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் இணைந்து கைலப்ப கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு எதிராகப் பிரிவினை வழக்குத் தொடர்ந்ததாக பத்தி 3 –ல் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது உண்மையான தகராறு ராமசாமி கவுண்டரின் குடும்பத்திற்கும் ராமசாமியின் மூத்த சகோதரர் கைலப்ப கவுண்டரின் குடும்பத்திற்கும் இடையே உள்ளது என்றும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து, சட்டப்பூர்வ வாரிசுகளைச் சேர்த்ததை தவிர, வேறு திருத்தம் செய்யப்படவில்லை எனவும், மனுதாரர் 2ம் வாதியை, பிரதிவாதியாக மாற்ற மனு தாக்கல் செய்து மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், பாகம் கோரிய வழக்கில் அளவுகள் மற்றும் எல்லைகளானது முதல்நிலை தீர்ப்பாணையில் தீர்மானிக்க இயலாது என்றும், மனுவில் மனுதாரர் கோரும் பரிகாரத்தை இறுதிநிலை விண்ணப்பத்தின் போது மட்டுமே பெற முடியும் என்றும், மேலும் இந்த மனுதாரர் மற்ற பிரதிவாதிகளுடன் கைகோர்த்து இந்த எதிர்மனுதாரர்/2ம் வாதியின் ஆதாரத்தை ரத்து செய்ய முயற்சிப்பதாகவும், இந்த 2ம் வாதி தனது சார்பாகவும்,

மனுதாரர்கள் மற்றும் அவர்களது தாயார் சார்பாகவும் வாக்குமூலம் அளித்துள்ளதாகக் கூறுகிறார். மேலும் மனுதாரர்/3ம் வாதி 05.05.2003 அன்று ஹாரூரில் உள்ள துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1542/2003 இன் கீழ் 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியுடன் ஒரு பிரிவினை செய்து கொண்டதாகவும், அதில் வழக்கு சொத்து இந்த 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியின் பங்கிற்கு வந்ததாகவும், மனுதாரருக்கு வழக்குச் சொத்தின் மீது எந்த உரிமையும் இல்லை என்றும், மேலும் அவர் 2003 ஆம் ஆண்டிலேயே இந்த 2ம் வாதிக்கு ஆதரவாக தனது பங்கை விடுதலை செய்து கொடுத்துள்ளதாகவும், இப்போது, தனக்குள் ஒரு உரிமையை உருவாக்கி, நடவடிக்கைகளை இழுத்தடிக்க வேண்டி மனுதாரர் கைலப்ப கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளின் தூண்டுதலின் பேரில் தற்போதைய விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு ஏதேனும் உரிமை இருந்தால், இறுதிநிலை விண்ணப்பத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. <u>6ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தாக்கல் செய்து 7ம் எதிர்மனுதாரர்/5 ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

6ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும், வழக்கானது வாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டு மேற்படி சாட்சியத்தினை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என்றும், இந்நிலையில் 9 மற்றும் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கானது ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டு தீர்ப்பிற்காக வாய்தா போடப்பட்டு வழக்கு நிலுவையிலிருந்த சமயத்தில் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தங்களுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்து பதிலுரை தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கில் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பில்

வாதிகளை மறு விசாரணை செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து அம்மனுவானது அனுமதிக்கப்பட்டு 2ம் வாதியினை குறுக்கு விசாரணை செய்து வழக்கானது இருதரப்பு வாதத்திற்காக நிலுவையில் இருக்கும் சமயத்தில் மனுதாரர்/3ம் வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5. <u>**11ம் எதிர்மனுதாரர்/9ம் பிரதிவாதி தாக்கல் செய்து 12ம் எதிர்மனுதாரர்/10 ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். வழக்கு தாக்கல் செய்யும் போது, 1ம் வாதியான இறந்த செல்லம்மாள், மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் இணைந்து கைலப்ப கவுண்டரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு எதிராகப் பிரிவினை வழக்குத் தொடர்ந்ததாக பத்தி 3 –ல் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது உண்மையான தகராறு ராமசாமி கவுண்டரின் குடும்பத்திற்கும் ராமசாமியின் மூத்த சகோதரர் கைலப்ப கவுண்டரின் குடும்பத்திற்கும் இடையே உள்ளது என்றும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து, சட்டப்பூர்வ வாரிசுகளைச் சேர்ப்பதைத் தவிர, மனுதாரர் 2ம் வாதியை, பிரதிவாதியாக மாற்ற மனு தாக்கல் செய்து மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

மனுதாரரும், 2ம் வாதியும் கூட்டாக கைகோர்த்து அ.வ.எண்.200/2004 வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் ஏற்கனவே 2003 ஆம் ஆண்டு ஹரூரில் எதிர்மனுதாரர் /இரண்டாவது வாதிக்கு ஆதரவாக அவரது பங்குகளை வெளியிட்டதாகவும், இந்த எதிர்மனுதாரர்கள் 3 வது பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகள் என்றும், அவரது மரணத்திற்குப் பிறகு இந்த பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுகள் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்ட பின்னிட்டு மனுதாரர், 2ம் வாதியிடமிருந்து ஒரு பங்கைப் பெற முடியாது என்றும், எனவே, அவர்கள் கூட்டாக கைகோர்த்து இந்த பிரதிவாதியின் ஆதாரத்தை ரத்து செய்ய முயற்சிப்பதாகவும், எதிர்மனுதாரர்/2ம் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்த

பின்னிட்டு பிரதிவாதிகள் Exparte–ஆக இருக்கும் சமயத்தில், வா.சா.2 சாட்சியத்திற்காக இந்நீதிமன்றம் போதுமான கால அவகாசம் அளித்தது என்றும், இந்நிலையில் பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகி போட்டியிடத் தயாராக இருந்ததாகவும், இதன் காரணமாக மனுதாரர் பயந்து, மனுதாரரும், 2 வது வாதியும், இறுதி ஆணை விண்ணப்பத்தில் மனுதாரருக்கு உரிமை இருந்தால், இந்த மனு தாக்கல் செய்து நடவடிக்கைகளை இழுத்தடிப்பதாகவும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

6. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

7. மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர்/3 ம் வாதி இம்மனுவை வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறவு செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கானது மனுதாரர் மற்றும் 1, 2 வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம், தனித்த சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவில் மனுதாரர்/3 ம் வாதிக்கு தாவா சொத்தில் 1/4 பாகம் தாவா படி கோரப்பட்டுள்ளதாகவும், ஆனால் 2 ம் வாதி தனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து முழுவதும் தனக்கே சேர வேண்டியது என தாவாவிற்கு எதிராக மனுதாரர்/3 ம் வாதிக்கு பாகம் இல்லை என்பது போல் குறிப்பிட்டதால் 2 ம் வாதியை பிரதிவாதியாக மாற்றக்கோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் தற்பொழுது தனது தரப்பு சாட்சியத்தை மறுதிறவு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, வழக்கானது இறுதி வாதத்திற்காக உள்ள நிலையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளனர்.

11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்/3ம் வாதி தனது பாகத்தை 2ம் வாதிக்கு 2003ம் ஆண்டு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டதாகவும், அவருக்கு தாவா சொத்தில் பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள். அதேபோல் 2ம் எதிர்மனுதாரரர்/2ம் வாதி தரப்பில் கடந்த 05.05.2003ம் தேதியில் ஆவண எண். 1542/2003ன் படி மனுதாரர்/3ம் வாதி தனது பாகத்தை விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததால் அவருக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

மனுவையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில் வழக்கானது மனுதாரர் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. வழக்கு விசாரணையின் போது 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதியானவர் தனக்கு மட்டுமே தாவா சொத்தில் உரிமை உள்ளது போல் பிரமாணவாக்குமூலம் அளித்துள்ளதாலும், மனுதாரர்/3ம் வாதி தரப்பு சாட்சியத்தை பதிவு செய்தால் தான் வழக்கின் இறுதி முடிவுக்கு வர இயலும் என்பதாலும் நீதியின் நலன் கருதியும் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 9–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.09 18:48:05 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

**இல்லை**

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.09.09 18:48:12 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 13/2025 இன்
அ.வ. எண்.194/2004
நாள் : 09.09.2025